## பிப்ரவரி - 7

**"அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." - ரோம 13 : 10**

தன்னுடைய இருதயம் தன்னுடைய புது உடன்படிக்கையின் பிரமாணமாகிய அன்புக்கு, அதாவது, இரக்கம், சாந்தம், நன்மை ஆகிய இவைகளுக்கு இணக்கமாக இல்லை என்று காண்கிறவன், வார்த்தையின் எந்த அர்த்தத்தின்படியும், தேவனுடைய ஒரு குமாரனாகவும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதற்குரிய சான்றில் அல்லது அடையாளத்தில் குறையுள்ளவனாயிருக்கிறான். சகோதரருக்காக நம்முடைய இருதயங்களில் அன்பும் எல்லா மனிதரிடத்திலும், மிருகங்களிடத்திலும் கூட சாந்தமும், இரக்கமும் இல்லாவிட்டால், தற்கால நிலைமைகளில் அவசியமான தியாகங்களை செய்வதற்கு நம்மைக்கொண்டு செலுத்தும் ஆவி நம்மிடத்தில் இல்லை. சீக்கிரத்தில் தியாகத்தின் பாதையில் தங்களைப் பிடித்திருக்கும் பெருமையின் வீண்புகழ்ச்சியின் சக்தி முறிந்து, இப்படிப்பட்டவர்களைத் தன்னையம் முழுவதுமாகக் கட்டுப்படுத்தி விடும்.

**- Z ’98, 201 (R 2328).**

தேவனுடைய பிரமாணம், தனித்த தொடர்ச்சியற்ற நீரோடைகளால் ஆக்கப்பட்டிருக்கிறதாக அல்ல, ஆனால் அதை அன்பாகிய மகா மேன்மையான ஊற்றாகப் பார்க்க வேண்டும். அதிலிருந்து தெய்வீக கற்பனைகளின் எல்லா நீரோடைகளும் பாய்ந்தோடுகின்றன. இந்தக் கருத்தின்படி, தேவனுடைய பிரமாணம் அன்பானதால், அதன் கற்பனைகளில் ஒன்றை மீறுவது எப்படி முழுப் பிரமாணத்தையும் மீறுவதாகும் என்று நாம் அறிந்து கொள்ளலாம். அப்படியே அன்பின் ஜீவியமும் பிரமாணத்தின் நிறைவேறுதல் என்பதைக் கண்டு கொள்ளலாம். **- P ’35, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ரோம 13:8,9; மத் 7:12; 22:38-40; யாத் 20:16; 23:4,5; உபா 22:1-4; சங் 15:1-3; நீதி 3:28,29; எரே 22:13; ஏசா 58:6-14; சகரி 8:16,17; லூக் 10:25-37; ரோம 15:12; கலா 6:10; எபி 13:3; யாக் 2:8;

**கோபுர வாசிப்பு :** Z ’12, 117 (R 5006).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் அன்பை அப்பியாசித்தேனா? எப்படி? ஏன்? எந்த நிலைமைகளில்? உதவியாக அல்லது இடையூறாக இருந்தவை எவை? பலன் என்ன?